விலை ரூபா 1-25

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஆவணி 2 ஜூலகம் 20 இதழ் 185
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 18-8-84

# "இராணுவத் தீர்வில் எமக்கு நம்பிக்கை இல்லை"

## அமைச்சர் லலித் விளக்கம்

[கொழும்பு]

"இனப் பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்த்துவைப்பதில் அரசாங்கத்துக்கு நம்பிக்கை இல்லை. அரசியல் தீர்வையே அரசு விரும்புகிறது. தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்குத் திடமானமுறையில் ஆயுதப்படையினர் பதிலடி கொடுத்துவரும் அதேநேரத்தில் வன்முறைகளைக் கைவிடும் வரை தீவிரவாதிகளுடன் பேச்சு நடத்தவும் நாம் தயாரில்லை."

இவ்வாறு தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி நேற்று இரவு தெரிவித்தார்.

பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டைத் தொடர்ந்து செய்தியாளர் மகாநாட்டை அமைச்சர் லலித்அத்துலத்முதலி கூட்டினர்.

(8ம் பக்கம் பார்க்க)

# 20 நிமிடங்கள் நடைபெற்ற சர்வகட்சி மாநாடு: கூட்டணி விலகிக்கொண்டது!

## மகாநாடு மீண்டும் 21ல் கூடும்

(கொழும்பு)

தமிழர் பிரச்னை பற்றிய சர்வகட்சி மாநாடு நேற்று மாலை பண்டாரநாயகா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சுமார் இருபது நிமிட நேரம்வரை நடைபெற்று, இம்மாதம் 21-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று மாலை ஆறுமணிக்கு ஆரம்பமான மகாநாட்டில் கம்யூனிஸ்ட்கட்சி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் ஆகிய கட்சிகள் கலந்துகொள்ளவில்லை. தமிழர்விடுதலைக் கூட்டணியும் தமிழரசுக்கட்சியும் மகாநாடு ஆரம்பத்தில் சுமார் பத்துநிமிட நேரம்வரை கலந்துகொண்டுவிட்டு கூட்ட நிகழ்ச்சிகளிலிருந்து விலகிக்கொண்டனர்.

சர்வகட்சி மகாநாடு நேற்று மாலை ஆறு மணிக்கு ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தன தலைமையில் ஆரம்பமானது.

ஜனாதிபதி தமது உரையில்; மகாநாட்டில் முன்னர் நியமிக்கப்பட்ட இரண்டு குழுக்களின் பணிகள் பற்றி விபரமாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மகாசங்கத்தினர் அறிக்கை ஒன்றை வெளியிட்டதும், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துவிட்டு மகாநாட்டின் நேற்றைய கூட்டத்தில் தொடர்ந்து பங்குபற்றாமல்

(8ம் பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழர் பிரச்னை: உலக நாடுகளுடன் இந்திரா தொடர்பு

(யாழ்ப்பாணம்)

"இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, உலகத் தலைவர்களுடன் தொடர்புகொண்டு வருகிறார். இலங்கையின் வடபகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஐ. நா. மனிதஉரிமைகள் குழுவுடனும் அவர் தொடர்பு கொண்டுள்ளார்".

இத்தகவலை, இந்திய வெளிவிவகாரத் துணை அமைச்சர் திரு. ராம் நிவாஸ் மிர்தா வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

லோகசபையிலும் ராஜ்ய சபையிலும் இலங்கை நிலை குறித்து அறிக்கையொன்றை அமைச்சர் வெளியிட்டார்.

இலங்கை நிலைகுறித்து அரசு நிதானமாகச் செயற்பட்டுவருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"இலங்கைத் தமிழர்கள்மீது வெளிநாடுகளின் உதவியுடன் அரசு நடத்தி வரும் தாக்குதல் குறித்து இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

"பிரச்னையை இராணுவ ரீதியில் தீர்க்க முடியாது. அரசியல் ரீதியிலேயே தீர்க்க முடி

(8-ம் பக்கம்பார்க்க)

## தேசிய சேமிப்பு வங்கியில் ரூ. 3 லட்சம் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதானவீதியிலுள்ள தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து 3 லட்சத்து 65 ஆயிரத்து 401ரூபா 81சதம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 11மணியளவில் இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது,

இனந்தெரியாத கோஷ்டியினரே, வெடிகுண்டுகளால் வங்கிக்காரியாலயத்தைத் தகர்த்து அங்கிருந்த இரும்புப் பெட்டியை உடைத்து பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

நேற்று முன்தினமிரவு 10-30மணியளவில் பலத்த சத்தத்துடன் குண்டொன்று வெடித்தது. இதனைத்தொடர்ந்து 11மணியளவில் தொடர்ச்சியாக 3குண்டுகள் வெடித்தன.

நேற்றுக்காலை பெருந்திரளான மக்கள் சென்று சேத

(8ம் பக்கம் பார்க்க)

## உப-அலுவலகத்தில் கொள்ளை!

[மாவிட்டபுரம்]

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் உப-அலுவலகம் ஒன்றிலிருந்து 9,946 ரூபா,

(8-ம் பக்கம் பார்க்க)

## மோட்டார் சைக்கிளில் சென்ற இரு இளைஞர்கள்மீது பொலிஸ் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரை வவனியா பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு இளைஞர்களைப் பொலிசார் நிறுத்தும்படி சைகை காட்டியும் அவர்கள் நிற்பாட்டாமல் சென்று கொண்டிருந்ததாகவும், அதனால் பொலிசார் துப்பாக்கிப்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் கப்பல்களை பகிஷ்கரிக்க வேண்டுமாம்!

### இந்தியத் துறைமுக சம்மேளனத் தலைவர் கோரிக்கை

சென்னை, ஆக. 17

இலங்கைக் கப்பல்களும், இலங்கைக்கொடிகளைத் தாங்கி வரும் ஏனைய கப்பல்களும் இந்தியாவின் சகல துறைமுகங்களிலும் பகிஷ்கரிக்கப்படவேண்டும என்று இந்தியத் துறைமுக மற்றும் கப்பல் தொழிலாளர்கள் சம்மேள

(8-ம் பக்கம் பார்க்க)

சுன்னாகம் சம்பவம்

## "சர்வதேச விசாரணைக்குழு விசாரிக்க வேண்டும்"

### ஐ. நா. கூட்டத்தில் வலியுறுத்து

[ஜெனீவா]

"சுன்னாகம் பொலிஸ்நிலையச் சம்பவம் குறித்து சர்வதேச விசாரணைகுழுஒன்றுவிசாரணை நடத்தவேண்டும்."

இவ்வாறு ஐ. நா மனித உரிமைகள் கூட்டத்தில் உரையாற்றிய சர்வதேச மனித உரிமைகள் கமிட்டித் தலைவர் திரு. வோல்ட்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

'சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் கொலை செய்யப்பட்டதாகவே கூறப்படு

(5-ம் பக்கம் பார்க்க)

GAMET TRANSPORT Ltd.
கமற் பஸ் சேவை
காங்கேசன்துறை – வெள்ளவத்தை
வெள்ளவத்தை – காங்கேசன்துறை
எமது வாடிக்கையாளரின்
வேண்டுகோளை ஏற்று வழமையான எங்கள்
குளிரூட்டப்பட்ட காலை பஸ் சேவையுடன்
மீண்டும் இரவு பஸ் சேவையை
நாளை ஞாயிறு முதல் ஆரம்பிக்கப்படும்
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.
புறப்படும் நேரங்கள்:
காலை 6 மணி காங்கேசன்துறையிலிருந்து
காலை 7-30 மணி யாழ். நகரிலிருநது
(MARKET பெற்றோல் நிலையத்திலிருந்து)
மாலை 4-00 மணி காங்கேசன்துறையிலிருந்து
மாலை 5-00 மணி யாழ். நகரிலிருந்து
டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்:
பி. கண்ணப்பர், கிருஷ்ணா ஸ்ரோர்ஸ்,
கே. கே. எஸ். றோட், தெல்லிப்பளை
மினிறேட்ஸ் சென்ரர், J.M C.
கட்டடம், 3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். T. phone 24331,
நியூ வி. எஸ். கே. 184, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T. phone: 24028,
வி. வடிவேல் அன்சன்ஸ், 142, ஆஸ்பத்திரிவீதி,
யாழ்ப்பாணம். T. phone 24359,
எமது தலைமை அலுவலகம்:
கிறீன் பீல்ட் ரவல் ஒப்பரேட்டர்ஸ்,
26. மொடல் மாக்கற் (மேல் மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 23875, 22784
(1372)

# விளம்பரம்

## விற்பனைக்கு

BAIRAHA FARMS HISEX வெள்ளை, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள். சேவற் குஞ்சுகள் 20-ந் திகதி விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ் பிரம்படி, கொக்குவில். 1244

ஒவ்வொருநாளும் அநேக விதப்பொருட்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளிலும் போயா தினங்களிலும் பல விதப்பொருட்களும் விசேஷ போட்டி விலைகளில் விற்பனையாகும். விபரங்களுக்கு முத்திரைக் கவருடன் விண்ணப்பிக்கவும் கார்த்திகேசு ஏல விற்பனை நிலையம் கோப்பாய். 1251

வயல் வேலை, பாரவேலை துரிதமாய்ச் செய்யும் கெச்சிதமான வடக்கன் மாடுகளும், வண்டிலும். முன்பு சப்பற உபகரணங்கள் இழுத்தவை. விலை: மாடுகளும் வண்டிலும் பன்னீராயிரம் ரூபாய். தரகர் தேவையில்லை. சண்முகநாதன், கந்தானைக் கமம். 3-ம் கட்டை, இரணைமடு ரோட், கிளிநொச்சி. 1370

## விற்பனைக்கு

5 கிழமை நிரம்பிய பூச்சி அகற்றிய நல்ல இன கறுப்பு - மண்ணிற, கறுப்பு - வெள்ளீய அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. கே. திருநாவுக்கரசு, வி.கே.ரி. கட்டடம், கொக்குவில் மேற்கு. 1355

நாவற்குழி - கண்டி வீதியில் அருணா பேக்கரிக்கு முன்பாக 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். விபரங்கள்: அருணா பேக்கரி, நாவற்குழி. 1367

## வெற்றுச் சாக்கு

7000 வெற்றுச் சாக்கு கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்குள்ளது. கேள்விப்பத்திரமும் நிபந்தனையும் மீளளிக்கப்படாத ரூபாய் ஐந்து (ரூ.5/-) பிரதம சங்கத்தில் செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திர வைப்புப் பணமாக ரூபா 200/- செலுத்த வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 22-8-1984,

பொதுமுகாமையாளர்,
பூநகரி ப. நோ. கூ. சங்கம்,
பூநகரி.
1364

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்
மாவட்ட நீதிமன்றம்

அளவெட்டி வடக்கு அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற வேலுப்பிள்ளை தம்பிமுத்து என்பவரின் மரணசாதனமில்லாத மரணச்சொத்துக்களின் விடயத்தில்.

மரணமெய்தியவர்
தம்பிமுத்து கைம்பெண் கனகம்மா, அளவெட்டி வடக்கு, அளவெட்டி.
எதிராக
மனுதார்

வழ. இல ரி/147

1 தம்பிமுத்து சிவஞானம் அளவெட்டி தற்காலம் எட்மின்ரர் கனடா.
2 தம்பிமுத்து சிவபாலன் (டாக்டர்) அளவெட்டி தற்காலம் பெட்போட் இங்கிலாந்து.
3 பொன்னையா சிவபாத சுந்தரனும்
4 பெண் சிவநேசமும் அளவெட்டி வடக்கு, அளவெட்டி
எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்துக்களை நிரூபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1983-ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1983:ம் ஆண்டு தைமாதம் 21-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
பதில் பதிவாளர்

தயாரித்தவர்
**க. குணரத்தினம்**
மனுதாரின் சட்டத்தரணி

காரணம் காட்டும் திகதி 12-9-84 வரை நீடிக்கப்படுகிறது.

**ஆ. சிவபாதசுந்தரம்**
பதிவாளர்
1063

## தேவை

சுத்தமான, நல்ல ரக இலுப்பை விதையும், வேப்பம் விதையும் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். 1357

## வகுப்புக்கள்

I. C. M. A. A, B, P I, II, and III I.A.A, Chartered Preliminary வகுப்புக்கள் கொழும்பு விரிவுரையாளரால் Business Institute பிள்ளையார் வீதி, ஆனைக்கோட்டை வடக்கு, ஆனைக்கோட்டை. 1345

## தவறிவிட்டது

முப்பத்துமூன்று திருமணப் படங்களையும் நெகட்டிவ்களையும் கொண்ட சிறிய அல்பம் யாழ். நகரிலிருந்து திருநெல்வேலி செல்லும் வழியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைத்தால் 100 ரூபா சன்மானம் வழங்கப்படும். பரிமளா ஸ்ரோர்ஸ், 26 A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 1360

## காணவில்லை

கடந்த திங்கட்கிழமை (13-8-84) கைதடிச் சந்தியில் நடைபெற்றஅசம்பாவிதத்தில் எனது மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வரிச் சான்றிதழ், அடையாள அட்டை, இத்துடன் நான்கு பேனைகள், ஒரு அளவு நாடா, குறிப்புப் புத்தகம் இவைகளை ஒரு பையுடன் தவறவிட்டுவிட்டேன். கண்டெடுத்தவர்கள் கைதடிச் சந்தியில் இருக்கும் ''சீக்கோ'' கட்டிடப் பொருட்கள்கள் விற்பனை நிலையத்தில் கையளித்து சன்மானம் ரூபா 300 பெற்றுக் கொள்ளவும். 1368

ST. JOHN'S COLLEGE JAFFNA,
and
CHUNDIKULI GIRL'S COLLEGE.
College and Hostel
will reopen for the Third Term
on Monday the 27th of August.
(1342) PRINCIPALS.

## சன்மானம்

தாலிக்கொடி, உட்பட சங்கிலி, காப்பு, கைக் கடிகாரம், ரொக்கப்பணம் கடந்த 14-ந் திகதி இரவு எமது வீட்டுக் கூரை ஓடுகள் களற்றி திருடப்பட்டுள்ளது. இது பற்றி தகவல் தருபவருக்கு தகுந்த சன்மானம் தரப்படும். தகவல் இரகசியமாக வைக்கப்படும்.

தகவல்: கெங்காதரன், நீர்வேலி தெற்கு.
1371

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### சற்குரு மன்மதலிங்கம் (கணேஷ்)

தோற்றம்:
17–01–1937



மறைவு:
20–07–1984

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து இன்றுடன் 31 நாட்கள் கடந்துவிட்டாலும், உங்கள் நினைவுகள் என்றுமே எம் நெஞ்சைவிட்டு அகலாத அணையா ஒளிவிளக்காய் எம் உள்ளங்களில் வாழ்வீர்கள்.

31-07-84 அன்று அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டும், அனுதாபச்செய்திகள் அனுப்பியும், எமது துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

மேலும் நாளை (19-08-84) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

உங்கள் பிரிவால் வேதனையுற்றுக்கொண்டிருக்கும்.
அம்மா, சின்னம்மா, அக்கா. தம்பி, அத்தான், மைத்துனி, மற்றும் உற்றார் உறவினர்.

நந்தாவில், கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். 1361

## மின்சார பிரச்னையா!

★ 3 பேஸ் 1 பேஸ் வயரிங்
(பொயின்ருக்கு ரூபா 35/-)
★ ரான்ஸ்போமர்
(டெக், பூஸ்ரர், வெல்டிங், றேடியோ)
★ லிகுடைசர்ஸ் மோட்டார் வாஷிங்மெஷின்
★ மின்விசிறி குக்கர், ஸ்பீக்கர் ஆகியவை.

திருத்த / றீவைண்டிங் செய்ய

**ஒமேகா** கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகில்)
வீடுகளுக்கு வந்து வேலைகள் செய்யப்படும்.

வேகமாக விற்பனையாகின்றன அஸ்ரன் வெளியீடு

தராதரப்பத்திரம் பெற்ற
உதவி ஆசிரியர் தேர்வுக்கான
விவசாயம், கணிதம், விஞ்ஞானம்,
மனையியல், வர்த்தகம்
சம்பந்தமான

## பொது அறிவு பொது உளச்சார்பு

நூல் விலை ரூபா 47/50

கிடைக்குமிடங்கள்:
பூபாலசிங்கம் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
மக்மில்லன் புத்தகசாலை,
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
அஸ்ரன் இன்ஸ்ரியூட், யாழ்ப்பாணம்.

தபால் மூலம் பெற விரும்புவோர்
ASTAN INSTITUTE, JAFFNA. என்ற முகவரிக்கு
ரூபா 60/- காசுக்கட்டளையை அனுப்பி
பதிவுத் தபாலில் பெற்றுக்கொள்ளலாம்.

**ASTAN INSTITUTE**
166/1, HOSPITAL ROAD, JAFFNA.

## ஒய்வூதிய சேமிப்புத் திடடம்

உங்கள் குறைந்த முதலீடுகளில் கூடிய வாய்ப்பு
வாழ்நாள் பூராகவும் மாதாந்தம்
பணம் பெறும் வாய்ப்பு
உங்களின் பின் கடைசிப்பிள்ளைக்கு /
கணவனுயின் மனைவிக்கும்
மனைவியாயின் கணவனுக்கும்

**சாட்டுதல் செய்யும் உரிமை**

நீங்கள் இட்ட தொகைக்கெதிராக
உடனடியாக கடன் வாய்ப்பு
இன்னும் எத்தனையோ அரியவாய்ப்புகள்

**விரையுங்கள்**

**உங்கள் எதிர்காலத்தை**
**ஒளிமயமாக்குங்கள்**
இதோ உங்கள் விருப்பத்திற்கேற்ப

| | | 55 வயதின்பின் |
|---|---|---|
| வயதெல்லை | கட்டும்தொகை | ஆயுள்வரை |
| 20—25 | 20,000 | 1450/- |
| 26—30 | 25,000 | 1450/- |
| 31—35 | 30,000 | 1450/- |
| 36—45 | 35,000 | 1450/- |
| 46—50 | 40,000 | 1450/- |
| 51—55 | 45,000 | 1450/- |

மேலதிக விபரங்கட்கு:
**நிதிப் பணிப்பாளர்**

**Financial Association Ltd.**
402 1/2, K. K. S. ROAD, JAFENA.

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,

**கொழும்பு ஸ்ருடியோ**

# புதியஆந்திரஅரசின் பெரும்பான்மை 1மாதத்தில் நிரூபிக்கப்பட வேண்டும்

## பாஸ்கரராவுக்கு ஆளுநர் பணிப்பு!

### ஆட்சி மாற்றத்துடன் சம்பந்தமில்லை என்கிறது இந்திரா காங்கிரஸ்

ஹைதராபாத், ஆக. 17.

**ஆந்திராவில் அமைக்கப்பட்டுள்ள திரு. பாஸ்கரராவ் தலைமையிலான புதிய மாநில அரசாங்கம் இன்னும் ஒரு மாத காலத்தினுள் சட்ட சபையில் அதற்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டும் என்று ஆந்திர ஆளுநர் திரு. ராம்லால் பணித்துள்ளார். திரு. பாஸ்கரராவ் நேற்று ஆளுநரின் உத்தியோகபூர்வ இல்லமான 'ராஜ்பவனில்' புதிய முதலமைச்சராக பதவியேற்றதைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு அவரிடம் ஆளுநர் தெரிவித்தார்.**

நேற்று ஒரே தினத்தில் ஆந்திர மாநில அரசில் பல மாற்றங்கள் திடீர், திடீரென நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. முன்னுள் முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் ஆளுநரைச் சந்தித்து தமக்கு சட்ட சபையில் 163 பேர் கொண்ட பெரும்பான்மை பலம் இருப்பதாகத் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் தமது சட்ட சபை சகாக்களைச் சந்தித்து தமது அரசின் நிலவரம் குறித்து ஆராய்ந்தார். அவ்வேளையிலேயே ஆளுநரிடமிருந்துசெய்தியொன்றுதிரு ராமராவிடம் தரப்பட்டது. அதில் தற்போதைய அரசின் பெரும்பான்மை குறித்து தாம் அதிருப்தி கொண்டியிருப்பதால் ராமராவின் அரசை ராஜினாமாச் செய்யும்படி ஆளுநர் கேட்டிருந்தார்.

### ராமராவ் கைது

இச் செய்தியையடுத்து ராமராவ் ஆளுநரின் இல்லம் சென்றார். அங்கு தாம் ராஜினாமாச் செய்யப் போவதில்லையென்று அறிவித்தார். கூடவே தாமாகவே முன்வந்து பொலிஸாரிடம் கைதானார். இவருடன் வேறும் ஏழு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதே வேளை திரு. பாஸ்கரராவ் ஆதரவாளர்களும் ஆளுநர் இல்லம் வந்து தம்மால் புதிய மாநில அரசாங்கத்தை அமைக்க முடியுமென்று கோஷமிட்டனர்.

திரு. என். டி ராமராவ் கைது செய்யப்பட்டதையடுத்து ஆளுநர் புதிய அரசாங்கமொன்றை அமைக்கும்படி திரு. பாஸ்கரராவைக் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து அவர் ஆந்திர மாநிலத்தின் 16வது முதலமைச்சராக ஆளுநர் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

### இந்திரா காங்கிரஸ் ஆதரவு

திரு. பாஸ்கரராவ் தலைமையிலான புதிய அரசுக்கு, ஆந்திர மாநில இந்திரா காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ரோசையா தலைமையில் அக்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்க முன்வந்துள்ளனர்.

புதிய அரசாங்கத்தை அமைத்த பின்னர் திரு. பாஸ்கரராவ் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தினர். அப்போது அவர், தாம் புதிய கட்சி எதனையும் ஆரம்பிக்கவில்லையென்றும், தொடர்ந்து தெலுங்கு தேசக் கட்சியிலேயே இருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன் தமது புதிய அரசு மத்திய அரசுடன் சுமுக உறவுகளையே கொண்டிருக்குமெனத் தெரிவித்தார்.

ஆந்திராவில் ஆட்சி மாற்றம் குறித்து இந்திரா காங்கிரஸ் கட்சி பொதுச் செயலாளர் திரு. மூப்பனார் அறிக்கையொன்றைவெளியிட்டுள்ளார். அதில், ஆந்திராவில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்துக்கும், இந்திரா காங்கிரசுக்கும் எதுவித தொடர்புமில்லை என்று அவர் கூறியிருப்பதுடன், திரு என். டி. ராமராவ் தலைமையிலான ஆட்சியில் அதிருப்தி கொண்டவர்களே ஆந்திராவில் புதிய அரசைத் தோற்றுவித்துள்ளனர் என்றார்.

### ஆந்திராவில் பதட்டம்

முன்னுள் முதலமைச்சர் திரு. ராமராவ் தொடர்ந்து காவலிலேயே வைக்கப்பட்டுள்ளார். ஆந்திராவில் பெரும் பதட்டநிலை காணப்படுகின்றது. நேற்று அனந்தபூர் என்னுமிடத்தில் ராமராவ் ஆதரவாளர்கள் கலகஞ்செய்த போது பொலிசார் சுட்டதில் இருவர் கொல்லப்பட்டனர். ஒன்பது பொலிசார் காயமடைந்தனர். ஒரு பொலிஸ் ஜீப் வண்டியும் எரிக்கப்பட்டது.

இதேவேளை இந்திய மத்திய அரசின் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திரு. ராமராவ் அரசு பதவிநீக்கஞ் செய்யப்பட்டதற்கு பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். அவர்கள் நேற்று பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்புச் செய்தனர். (கி)

---

## மத்தியபிரதேசத்தில் ரயில் விபத்து: 100 பேர் பலி? 56 சடலங்கள் மீட்பு!

புதுடில்லி, ஆக 17

மத்திய பிரதேச மாநிலத்தில் பாலகாட் என்னுமிடத்தில் நேற்று பயங்கரரயில் விபத்தொன்று இடம் பெற்றது. இதில் 100 பயணிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. இதுவரை ஐந்து பெண்கள் ஒரு குழந்தை உட்பட 56 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தென்கிழக்கு ரயில் சேவையின் பயணிகள் ரயில் வண்டியொன்றே இவ்விபத்துக்குள்ளானது இவ்வண்டியின் எஞ்ஜின் உட்பட ஐந்து பெட்டிகள் பாதையிலிருந்தும் தடம்புரண்டு அருகே வெள்ளம் நிரம்பியிருந்த வாய்க்கால் ஒன்றினுள் கவிழ்ந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

வெள்ளநீரினல் ரயில்பாதையில் ஏற்பட்டசேதமே இவ்விபத்துக்குக் காரணமென்று அறியப்பட்டுள்ளது.

இதேவேளை 24 பேரின் நிலைமை மோசமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 104 பேர் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய பிரதேஷ் முதலமைச்சர் அர்ஜுண்சிங் இவ் விபத்துக்குறித்து கவலை தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்கள் மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடுவழங்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது. [கி]


## 'ரவுணுக்கு' வந்து அவஸ்தைப்படாதீர்கள் !

வெளிநாட்டு ரெலிபோன் அழைப்புக்கள் பெறுவதற்கென
யாழ். பட்டினத்திற்கு வந்து
அவஸ்தைக்குள்ளாகாதீர் !

உங்கட்கு வேண்டிய அழைப்புக்களை,
நாங்கள் எங்கள் ரெலிபோன்களில்
சுழல் (DIAL) செய்து, எமது
'சுவிச்போட்' மூலமாக —

**உங்கள் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்துதருகிறோம் ;**

**உங்கட்கு ரெலிபோன் இல்லையாயின், உங்கட்கு அண்டிய அயலவரின் ரெலிபோனுக்கு இணைப்புச் செய்து தரலாம்.**

வெளிநாட்டு அழைப்புக்கள்
வேண்டியபோதெல்லாம்
இரவோ பகலோ எந்நேரமானுலும்
கூப்பிடுங்கள் குளோபலை.

**குளோபல்-** ரெலி : 23015, 23249, 23312


---

## செங்கடல் கண்ணிவெடிக்கு ஜேர்மன்கப்பல் இலக்கு!

கெய்ரோ, ஆக 17

செங்கடலில் நேற்று ஜெர்மன் கப்பல் ஒன்றும் கண்ணிவெடிக்கு இலக்கானது. இக்கப்பல்இப்பகுதியில்கண்ணிவெடிக்கு இலக்கான 19-வது கப்பலாகும்.

வடயேமனுக்கருகிலேயே 1½ ஆயிரம் தொன்கள் எடையுள்ள இக்கப்பல் கண்ணிவெடிக்கு இலக்கானது. ஆயினும் இதற்கு அதிகளவு சேதமில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கண்ணிவெடிகளை கண்டுபிடித்து அவற்றை அப்புறப்படுத்தும் பணிகள், மும்மரமாக செங்கடல், சூயஸ் கால்வாய்ப் பகுதியில் இடம் பெறுகிறது.

பிரிட்டிஷ், இத்தாலிய, பிரெஞ்சு, அமெரிக்கக்கப்பல்களுடன், சோவியத் கடற்படைக்கப்பலொன்றும் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் இறங்கியுள்ளது. சோவியத் கடற்படைக் கப்பல் எப்படியவது ஒரு கண்ணிவெடியைக் கண்டுபிடித்துவிட வேண்டும் என்று தீவிரமாக இயங்குகிறதெனத் தெரிவிக்கப்பட்டது.

சூயஸ், செங்கடல் கப்பல் பாதை சர்வதேச கப்பல் போக்குவரத்துக்கு உயிரோட்டமான தொன்று. தினம் 71 கப்பல்கள் இப்பாதையைப் பாவிக்கின்றன எனவே இங்கு கண்ணிவெடிப் பயமுறுத்தல் சர்வதேச வர்த்தகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாகும் என்று தெரிவிக்கப்பட்டது.

---

## நிவாரண உதவி இல்லையாம்

(வவுணதீவு)

மண்முனை மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது சேதமுற்ற வீடுகளுக்குரிய நிவாரண உதவிகள் பலருக்கு வழங்கப்பட வில்லை எனப்புகார கூறப்பட்டு வருகின்றது.

கிராம சேவையாளர்கள் மூலம் சமூகசேவைகள் இலாகாவிற்கு இதுபற்றி அறிவித்து 6மாதமாகியும் வழங்குவதற்கு ஆவன செய்யப்படவில்லையாம்.

---

## "ஆசியாட்வீரர்எதிர்வீரசிங்கம் எனது நல்ல நண்பர்!"

### லாஸ்ஏஞ்சல்ஸ் 'ஒலிம்பிக்' தீபமேற்றிய ரேபர் ஜோன்சன் கூறுகிறர்

லாஸ்ஏஞ்சல்ஸ், ஆக. 17

ஆசியாட் தங்கப்பதக்க வீரரான நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தமது ஒரு நல்லநண்பர் என்று 23-வது லாஸ்ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிவைத்த முன்னுள் அமெரிக்க ஒலிம்பிக் வீரர் திரு. ரேபர் ஜோன்சன் தெரிவித்தார்.

லாஸ்ஏஞ்சல்ஸில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இலங்கை ஒலிம்பிக் அணிக்கு வரவேற்புபசாரம் ஒன்று நடத்தப் பட்டது. அதில் கலந்து கொண்டு பேசிய போதே திரு. ஜோன்சன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆசிய தங்கப்பதக்கம்பெற்ற இலங்கையின் முன்னுள் உயரம் பாய்தல் வீரரும், ஒலிம்பிக் வீரருமான திரு. நாகலிங்கம் எதிர்வீரசிங்கம் தமது ஒருநல்ல நண்பர் என்று கூறியதுடன் திரு. எதிர்வீரசிங்கம் அமெரிக்கா வரும் போது தம்மை அடிக்கடி சந்திப்பதாகவும் அவர் கூறினர்.

தைவான் நாட்டில் திரு. எதிர்வீரசிங்கத்துடன் சிலவருடங்கள் விளையாட்டுப் பயிற்சி முகாமொன்றில் தாம் கழித்த நாட்களையும் ரேபர் ஜோன்சன் குறிப்பிட்டார்.

அமெரிக்க கறுப்பின வீரரான திரு. ஜோன்சன் 1964-ம் ஆண்டில் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் பெற்றவராவார். இவரே இத்தடவை லாஸ் ஏஞ்சல்ஸில் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றி 23-வது ஒலிம்பிக் பந்தயங்களை ஆரம்பித்து வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

### மணிவாக்கு

ஓர் கிளை முறிந்தபோதும்
உடன் இலை உதிர்ந்தபோதும்
வேர் மட்டும் அசைவதில்லை
வெளிப்படையாகச் சொல்வேன்.

— இயேசுகாவியம்.

# தபாலகத்தில் பணமில்லை!

## பொது மக்கள் பெரிதும் பாதிப்பு!!

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் பணத்தட்டுப்பாடு நிலவிவருவதால் நூற்றுக்கணக்கான மக்கள் தங்களுக்கு வந்த தந்திமணி ஓடர்களுக்கும், காசுக்கட்டளைகளுக்கும் பணத்தைப் பெறமுடியாது மிகவும் சிரமப்படுகின்றனர்.

பண்டத்தரிப்பு தபால் அலுவலகப் பிரதேசத்திலுள்ள ஏழு உபதபால் நிலையங்களிலும் இதுபோன்ற பணத்தட்டுப்பாடு நிலவிவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். தலைமைத் தபால் அலுவலகத்திலிருந்து முன்னர் தினமும் 10 ஆயிரம் ரூபா வரை பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்திற்கு அனுப்பி

(8ம் பக்கம் பார்க்க)

## நமதுநோக்கு

### செல்வம், செல்வாக்கு, சுதந்திரம்

பிறவியைப் பெருக்குவது ஆசை; மனித வாழ்வில் அல்லல்களை உண்டு பண்ணுவது ஆசை; சாந்தியைக் கலைப்பது ஆசை; ஆனந்தத்தை மறைப்பது ஆசை; பேராசையே மனித சமுதாயத்தின் பொது எதிரி.

புத்தபெருமானின் ஒப்பற்ற இப் போதனைக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டிய இலங்கை இன்று செல்வம், செல்வாக்கு, சுதந்திரமுடைய நாடாகத் திகழ்கின்றதா?

வடக்கிலும் கிழக்கிலும் புத்த கோவில்கள் பாழடைந்துவிடத்தான் புத்த தர்மம் இவ்விடங்களில் செழிப்படையவில்லை என்ற குரல் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டது.

மாதோட்ட நன்னகரில் வீற்றிருக்கும் கேதீச்சரத்தானும், கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையானும் இந்த நாடு அனைத்தையும் பாதுகாக்கவல்ல பரமபதிகள். இவற்றைவிட தெற்கில் கதிர்காமமும் மேற்கில் முன்னேசுவரமும் மக்கள் அனைவருக்கும் அருள் வழங்கும் தெய்வங்கள்.

தெய்வம் விடைகொடுக்கத்தயாராகவிருந்தபோதும் மனிதன் பேராசையில் உழல்கின்றான். அதற்கு உருக்கொடுக்கவந்த பொருளாதாரமே தாராள இறக்குமதிக்கொள்கை.

சிலநாட்களாக யாழ்ப்பாணக் கடைகள் படமாளிகைகள் பூட்டப்பட்டிருந்தது உண்மையில் பெரும் நட்டமா?

பொருள் படைத்தவர்கள் படங்களை அடிக்கடி பார்க்கலாம், கடைகளில் அனுவசியமான ஆடம்பரப் பொருள்களை வாங்கலாம். ஒரு துண்டு பாணுக்கு வழியில்லா ஏழைகள் திறக்கப்படும் கடைகளில் எதனை வாங்குவது?

பொருளீட்டுவோர் வியாபாரத்தையே பெரும்தொழிலாகக் கொண்டுள்ளனர். பேராசையால் பொருளை வரம்பின்றிக்குவிக்கின்றனர் கொள்ளைலாபம் அடிக்கின்றனர், ஆடம்பர வாழ்க்கைக்கு வழிதேடுகின்றனர்.

நிலம் பெற்றவர்களும் பொருள்களைப் பதுக்கி வைக்கும் இரக்கமற்ற முறையைக் கையாளுகின்றனர். இவையாவும் பொருளாதார உரிமையின் பெயரால் நடைபெறுகின்றன. உரிமை பெற்றிருந்தாலும் அம்மிகுதிப் பொருள் பிறருடையதே என்பது தமிழ் மறை கூறும் கருத்து.

''அறனறிந்து வெஃகா அறி
வுடையார்ச் சேரும்''

என்று முனிவர் பாராட்டியுள்ளார்.

மக்கள் சமுதாயம் இந்த நாட்டில், இந்தக் கட்டத்தில் அவசியம் உணர வேண்டியது: தன் தேவைக்கு ...ான பெரும் பொருள்களை ஒருவர் பதுக்கி வைத்தால் அது பிறருடைய வாழ்வைப் பாதிக்கும்; அதுகளவை விட எந்த விதத்திலும் குறைந்தது அன்று.

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பு பண்டைக் காலத்திலிருந்தே சிறப்புற நம் சமூகத்தில், நம் நாட்டில் நிலவியிருந்ததை அறிகின்றோம்.

இன்னுமொருபடி உயர்த்திக் கூறுவதானால், ஒருவன் தன் உழைப்புக்கு வரம்பு வைத்துக்கொள்ளுதலாகும்.

இன்று சர்வதேச பயங்கரவாதம் ஏற்பட்ட கதையை ஆராய்ந்தால் இந்தக்கோட்பாட்டின் ரகசியம் நன்றாகப் புரியும்.

எங்கள் நாட்டில் இது புகுந்துகொண்ட வரலாறு மிக நுட்பமானது.

மனிதன் தனதுதேவைக்கு வேண்டியபொருளைத்தேடிக் கொண்டு தனது ஆசைக்கு அணை கட்டிவிடவேண்டும். 'தேவைக்கு (Need) போதியதுண்டு. ஆசைக்கு (Greed) போதுமானதல்ல' என்றார் மகாத்மா.

பசியும், பிணியும் நீண்டகால வறுமையும் இல்லாத சமுதாயத்தை நமது உள்ளத்தில் கற்பனை செய்தால், அங்கு ததும்பும் இன்ப உணர்ச்சியை என்னென்று வர்ணிப்பது?

இல்லறத்தாருக்குரிய பஞ்சசீலங்கள்: கொல்லாமை, பொய்யாமை; கள்ளாமை, பிறன்மனை நயவாமை, மிகுபொருள் விரும்பாமை. திருக்குறளைப் பின் பற்றும் பலஇலக்கியங்கள் குறிப்பாக பொருள் வருவாயை வரையறுத்துக் கொள்ளும் அறநெறியை வற்புறுத்துகின்றன. இதுவே தமிழ்மறை ஆட்சியின் திடமான தூண்கள்.

''இயற்றலும், ஈட்டலும் 'காத்தலும்' காத்த வகுத்தலும் வல்லது அரசு''.

'கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற பாங்கில் எம் தமிழ் மக்கள் வாழப்பழகியிருப்பதால் சுதந்திர தமிழ் சமுதாயம் நாட்டுக்கு முன் மாதிரியாக இருப்பது எங்ஙனம்?

# இலங்கைத் தமிழர்க்கு அநீதி:
# இந்திய அரசு கண்டிக்கிறது

(புதுடில்லி)

நேற்றுமுன்தினம் லோக்சபாவில் இலங்கைநிலை குறித்து அறிக்கை ஒன்று தாக்கல்செய்யப்பட்டது.

இலங்கையில் தமிழர்களுக்கு நேர்ந்த அநீதியையும், கொடுமையையும் நாம் கண்டிப்பதாகவும், அதற்காக பாரத அரசு வருத்தம் தெரிவிக்கிறதென்றும் அவ்அறிக்கையில் குறிப்பிடப்ப டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு இனியும் எவ்வித கஷ்டமும் நேராதவிதத்தில், பாரத அரசு தன்னாலான நடவடிக்கையை எடுத்துவருகிறதென்றும்வெளியுறவுத்துணை அமைச்சர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நிலைமை வழமைக்குத் திரும்பிவருகிறதென்றும், கடந்த 48 மணி நேரத்தில் எவ்வித சம்பவங்களும் நடக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வேலைவாய்ப்பு

(மட்டக்களப்பு)

பிரதேச அபிவிருத்திஅமைச்சினால் மட்டக்களப்பு இலுப்படிச் சேனையில் பல லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள செங்கல் ஓட்டுத் தொழிற்சாலையை செப்டம்பர் மாதம் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை திறந்துவைக்கவிருக்கிறார்.

வேப்ப வெட்டுவான் பகுதியில் செங்கல், ஓடு தயாரிப்பதற்கான களிவகைகள் தாராளமாகக் கிடைப்பதால்தான் இத் தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்க மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் இயங்கும் இத் தொழிற்சாலையில் முதற் கட்டமாக சுமார் 75 உள்ளூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

### அமைதிக்கு பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் இன்னல்கள் தீர்ந்து விரைவில் சுதந்திரமான வாழ்க்கை அமைப்பும், அமைதியும், நிலைபெற வேண்டும். என்ற நோக்கத்திற்காக யாழ்.பேராலயத்தில் கடந்த இரு தினங்களாக வழிபாடு நடைபெற்றுவருகின்றது இவ் வழிபாடு இன்றும் நடைபெறும்.

### உலக தரிசன இயக்கம்

## 78 ஆயிரம் ரூபா உதவி

[வவுணதீவு]

உலகதரிசன இயக்கத்தின் ஆதரவில்கரவெட்டி மகிளவட்டுவான் மாதர் அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாக கிராமிய பொருளாதார முயற்சிகளை ஊக்குவிப்பதில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கங்களினால் தயாரிக்கப்பட்ட செயல் திட்டத்தை அங்கீகரித்த அதிகாரிகள் 78 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளனர்.

மேற்படி திட்டத்தின் கீழ் கால்நடை, பறவை வளர்ப்பு, மீன் பிடி, விவசாயப் போன்ற தொழில்கள் ஊக்குவிக்கப்படவுள்ளன. சங்க அங்கத்தவர்களுக்கு நேரடியாக மேற்படி கடன் வழங்கப்படும்.

இதன்படி கரவெட்டிக்கு 18ஆயிரம் ரூபாவும் மகிளவட்டவானுக்கு 60ஆயிரம் ரூபாவும் கடன் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நல்லைத்திருஞான சம்பந்தர் ஆதீனம்
19-வது ஆண்டு விழா நாளை நடைபெறுகிறது

## நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனம்

### குறள் வெண்பா

நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீனம்
நல்லபணி செய்தூழி வாழ்க!

### நேரிசை வெண்பா

ஆயிரத்துத் தொள்ளா யிரத்தறுபத் தாருண்டில்
மாயிருளாம் அஞ்ஞானம் மாண்டொழிந்து—போயகல
நல்லூரின் கண்ணுதித்த நல்லை ஆ தீனம்நல்
எல்லோன் போல் வாழ்க! எறித்து.

வானந் தொடுமதில்சூழ் வார்நல்லை தோன்றிய தோர்
ஞானசம் பந்தரா தீனம்மெய்ஞ்—ஞானமொடு
ஆத்துமவி டேற்றம் அவனிதொறும் மே லோங்கக்
காத்துப் பணிசெயுமே காண்.

### (விருத்தம்) ஆதீனத்தின் ஆட்சி

மண்ணகஞ்சேர் யாழ்நல்லை வாழ் மக்கள் மகிழ்வெய்தி
வளம்பெற்று வாழ்வ தற்குத்
தண்ணளிசேர் சங்கிலிய மாமன்னன் அற்றைநாளில்
செங்கோன்மை ஆட்சி செய்தான்
விண்ணவர்கோன் ஆனதிரு முருகனுமே என்றும் நல்லை
மேவியருள் ஆட்சி செய்ய
அ...மைதனிற் பணிபுரியும் அருண்மலிந்த ஆதீனம்
அருளாட்சி செய்கின்ற தம்மா!

### நல்லையில் மூவாட்சி

சிரம்பணிந்து அடியார்கள் சூழுந்தூய
சேந்தன்வாழ் நல்லூர் தன்னில்
அரசினரின் அரசாட்சி ஒன்றதாக
அறுமுகவன் ஆட்சியும்மற் றொன்றதாகும்
உரம்பெறுமிவ் வுன்னதவா தீனத்தின்
உள்ளருள்சேர் ஆட்சியுமின் னொன்றதாகும்
வரம்பெறும் தொல் நல்லூரில் மக்களெல்லாம்
வாழுகின்றார் ஆட்சி மூன்றால்.

### ''மணி ஐயர்''

தொன்றுதொட்டு ''மணிஐயர்'' எனும் பேரைப்
பூண்ட குரு
மஹா சந்நிதா னதி முதல்வர்
மன்னுமுயர் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத தேசிகசம்
பந்தபர மாசாரிய சுவாமிகள்,
என்றுமுயர் நல்லைவதி உம்பர்கோன் ஆனகுகனின்
அருண்மலிந்த பிரசங்கி யாகி,
அன்றோரா யிரத்துத்தொள் ளாயிரத்து அறுபானுறில்
ஆக்கினார் ஆளுகைசேர் ஆதீனத்தை.

### ஸ்வாமியும் பிரசங்க மாரியும்

நல்லைமிளிர் ஆதீனத் துயர்முதல்வ ரானஸ்வாமி
நவிலகில வீழ மெங்கும்
நல்லபிர சங்கமழை நாவன்மை யாற்பொழிந்து
நாட்டிற்கு விளைவை யாக்கி
எல்லையில் லாதகடல் தாண்டியயற் றேசங்கள்
எங்ஙனுஞ் சென்று போந்து
நல்லறிவை ஊட்டுபல பிரசங்கங் கள்செய்து
நல்விருது பெற்று மீண்டார்
விருதுபல பெற்றுமீண்ட வித்...கஞ்சேர் குருநாதர்
வாரிசாய் இளவரசை ஏற்படுத்திக்
கருதரிய பல பணிகள் காசினியிற் செய்தவர்
சடுதியாய்ச் சமாதி யுற்றார்
குருநாத சுவாமியின் வாரிசாய் இளவரசு
குறைபணிகள் தொடர்ந்து செய்ய
இரண்டாவ தாங்குருமா சந்நிதா னதிபதியாய்
இனிதுபணி செய்கின் றாரே!

கவியரசு வெண்பாமணி
முருகசூரியன்.

## ஜெனீவா மனித உரிமைகள் மகாநாடு

# இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் எடுப்பதில் முயற்சி

### இலங்கை தமிழ் பிரதிநிதிகள் குழு கலந்து கொள்கிறது!

ஜெனீவா, ஆகஸ்ட் 17

இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான தீர்மானமொன்றை நிறைவேற்றுவதில் சுவிற்சர்லாந்தில் ஜெனீவா நகரில் இடம்பெற்றுவரும் மனித அடிப்படை உரிமைகள் மகாநாட்டில் இலங்கைத் தமிழர்களைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று ஆர்வங்காட்டுகின்றது. இக்குழு லண்டனில் உள்ள சர்வதேச போர் தடுப்பு ஸ்தாபனத்தின் ஆதரவுடன் ஜெனீவா மகாநாட்டில் கலந்துகொள்கின்றது.

சிறுபான்மையினரைப் பாதுகாப்பது, பாரபட்சத்தைத் தவிர்ப்பது குறித்து இம்மகாநாட்டின் துணைக்கமிட்டி ஒன்று ஆராய்ந்துவருகின்றது. இக்கமிட்டிக் கூட்டத்திலேயே இலங்கை அரசாங்கத்துக்கெதிரான தீர்மானமொன்றை நிறைவேற்றுவதில் இலங்கைத் தமிழர் குழு முயன்றுவருகின்றது.

இத்துணைக் கமிட்டியின் முடிவையடுத்தே மனித உரிமைகள் ஆணைக்குழு இலங்கைக்கெதிராக தீர்மானமொன்றைக் கொண்டுவருவதற்கு மேற்கு நாடுகளின் அரசாங்கத்துக்கு ஆலோசனைவழங்கும். இக்கமிட்டியில் சர்வதேச ஜூரர்கள், மனித உரிமைகள் நிபுணர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இத்துணைக்கமிட்டிக்கூட்டத்தில் இலங்கை அரசின் பிரதிநிதிகளுக்கு பார்வையாளர் அந்தஸ்த்து வழங்கப்பட்டுள்ளது. இலங்கைக்குழுவில் ஜெனீவாவிலுள்ள ஐ. நா. கிளைக்கான இலங்கைத் தூதுவர் திரு. ஜயந்த தனபாலா, சொலிஸிஸ்டர் ஜெனரல் திரு. சுனில்டி சில்வா ஆகியோர் அடங்குகின்றனர்.

இதேவேளை இலங்கையில் தமிழர்களுக்கெதிராக இலங்கை அரசாங்கத்தினலும், சிங்கள மக்களாலும் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் குறித்து தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றும் சுவிற்சர்லாந்தில் காட்டப்பட்டது.

இலங்கைத் தமிழரான பொறியியலாளர் ஒருவர் தமக்கும், தமது இன மக்களுக்கும் இலங்கையில் இழைக்கப்பட்ட கொடுமைகளை இத்தொலைக்காட்சி நிகழ்ச்சியில்தோன்றி விபரித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கையால் வரையப்பட்ட சுவரொட்டிகள், தமிழீழ வரைபடங்கள் என்பனவும், சுவிற்சர்லாந்தில், மக்களிடையே இங்குள்ள தமிழர்களால் விநியோகிக்கப்படுகின்றன என்றும் கூறப்பட்டது.

இத்தகவல்களை ஜெனீவா வந்துள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளே வெளியிட்டிருப்பதுடன், இந்நடவடிக்கைகளுக்கெதிராக தம்மால் எதிர்ப்பிரசாரம் செய்யமுடியாதுள்ளதெனவும், ஏனெனில் இங்குள்ள தமிழர்கள் நன்கு திட்டமிட்டுப் பிரசாரங்களை மேற்கொள்கின்றனர் என்றும் கூறியுள்ளனர். (கி)

## மதுபோதையில் நின்றவர் பொல்லால் தாக்கப்பட்டு கொலை

(கிளிநொச்சி)

காணித்தகராறு காரணமாக எழுந்த வாய்த்தர்க்கம் கொலையில் முடிந்தது பொல்லால் தாக்கப்பட்டு அடிகாயங்களுக்குள்ளான 45 வயதுநபர் ஸ்த்தலத்திலே மரணமானர்.

இந்த சம்பவத்தை இவரது குடும்பத்தார் பார்த்திருந்தும் இவர்மரணமாகியவிடம் மறுநாள்தான் தெரியவந்ததாம்.

மரணமாகியவர் மதுபோதையில் நின்று சண்டையில் ஈடுபட்டதாலும், அவரது உடலில் காயங்கள் தென்படாமையாலும், இதைப் பெரிதுபடுத்தாதிருந்த இவரது உறவினர்கள் சம்பவம் நடந்த இடத்திலேயே அவரைபடுக்க வைத்துவிட்டு மறுநாள் காலை பார்த்தபோது மரணமாகிய விடயம் தெரியவந்ததாம்.

பூநகரி மட்டுவில் நாடு நல்ல தண்ணிகுளம் கிராமத்தில் வசித்துவந்த முத்துக்குமாரு செல்லத்துரை என்பவரே கொலையுண்டவராவர் இவரது மரணம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி நீதவான் கே. கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ்நிலைய சப் இன்ஸ்பெக்டர் ஜி. டி. ஸ்ரனிஸ்லோஸ் சார்ஜன் எஸ். துரைராசா ஆகியோர் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபரான சின்னத்துரை. தியாகராசாவை கைது செய்யுமாறு உத்தரவிட்ட நீதவான் கதிரவேற்பிள்ளை கொலைஎன தீர்ப்பு வழங்கினர்.

## வெடி குண்டு விபத்து தவிர்க்கப்பட்டது

[கிளிநொச்சி]

பரந்தன் முல்லைத்தீவு பிரதானவீதியில் முரசுமோட்டையில் உள்ள பாலம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த வெடிகுண்டு பொது மக்களால் கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பெரும் விபத்தொன்று தவிர்க்கப்பட்டது.

குண்டு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்வீதியால் வாகனப்போக்குவரத்து தடைப்பட்டது, முரசுமோட்டை கண்டாவளை புளியம் பொக்களைப் பகுதிகளில் பெரும்பரபரப்பு ஏற்பட்டது வாகனங்கள் வேறு பாதையால் திசைதிருப்பப்பட்டன.

பொலிஸ், இராணுவம் ஆகியோர் ஸ்தலத்திற்கு விரைந்து அவ்வெடிகுண்டை அப்புறப்படுத்திப்பலத்த கண்காணிப்புடன் வெடிக்கச் செய்தனர். மிகவும் பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்தது.

இதனையடுத்து கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் பெரும் பதட்டநிலை காணப்பட்டது.

## "சாதனை வீரர்களை உருவாக்கிய பெருமைக்குரியர் ஆழிக்குமரன்"

### உலக சாதனை வீரர் நஸீர் கண்ணீர் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

புதிது புதிதாகச் சாதனைகளைச் செய்யவேண்டுமென்ற உணர்வை நம்மிடையே ஏற்படுத்தியவர் ஆழிக்குமரன். எரிச்சல், பொறாமை எல்லாவற்றுக்கும் அப்பால் சென்று. புதிய சாதனை வீரர்களை உருவாக்கினர். ''கின்னஸ்'' என்ற உலக சாதனைப் புஸ்தகத்தை எம்போன்றவர்களுக்கு அறிமுகமாக்கி, எமது பெயர்களை இடம்பெற வைத்தவரும் அவரே!'' என்று ஆழிக்குமரன் ஆனந்தனின் மறைவு குறித்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த உலக சாதனை வீரரான ஜனுப் பரீத் நஸீர் கண்ணீர் அஞ்சலி செலுத்தியுள்ளார்.''

ஆங்கிலக் கால்வாயில் ஆழிக்குமரன் சாதனை முயற்சியை மேற்கொண்டிருந்தபோது மரணமான செய்தி பேரிடியாகத் தமிழினத்துக்கு அமைந்துவிட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனுப் பரீத் நஸீர் இரண்டு 'கின்னஸ்' உலக சாதனைகளைச் செய்தவர். ''நான் உலக சாதனைகளைச் செய்வதற்குக் காரணமாக இருந்தவர் ஆழிக்குமரன் என்பதைச் சொல்வதில் பெருமைப்படுகிறேன். எனக்கு ஆதரவுக்கரம் தந்து, என்னை உற்சாகப்படுத்தி, என்னை உலகசாதனை வீரனுக்கியவரும் அவரே!'' என்று கண்கலங்கிக் கூறினர்.

''யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் சாதி, மதம், இனம் என்ற குறுகிய வட்டத்துக்குள் நில்லாமல், தன்னை நாடி வந்தவர்களுக்கெல்லாம் உதவியளித்தவர் ஆனந்தன்'' என்றும் ஜனுப் நசீர் கூறினர்,

''தமிழர்களின் பெருஞ்சொத்து, தமிழர்கள் இங்கு இன்னல்பட்டுக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் அவரை இழந்திருக்கிறோம். அவர் இழப்பு பெரும் இழப்பு என்றும் அவர் ஆழ்ந்த கவலையுடன் கூறினர்.

## சர்வதேச

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிறது.

ஆனல் என்ன நடந்தது என்பது குறித்து எமக்கு எதுவும் கிடைக்கவில்லை. எனவே நீதியான விசாரணை ஒன்று நடத்தப்படவேண்டும்''என்று அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறினர்.

# ஒய்வூதியம், சம்பளம் கொடுப்பனவு அடுத்தவாரம்

(யாழ்ப்பாணம்)

ஒய்வூதியம் மற்றும் சம்பளக் கொடுப்பனவுகள் அடுத்த வாரம் நடைபெறும் என்று வங்கி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மூடப்பட்டிருக்கும் வங்கிக் கிளைகளைத் திறந்துவைத்து கொடுப்பனவுகள் செய்வதா அல்லது பாதுகாப்பான வசதிகளைக்கொண்ட நிலையங்களில் வைத்து கொடுப்பனவுகள் செய்வதா என்பது குறித்து வங்கி அதிகாரிகள் ஆலோசித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களாக யாழ். செயலக உத்தியோகத்தர்களும், வங்கி உத்தியோகத்தர்களும் சில இடங்களில் பார்வையிட்டபோதிலும் வங்கி அலுவல்கள் இயங்குவதற்கு அவை உகந்ததாக இல்லை என்று தெரிவித்தனர்.

கொழும்பிலுள்ள வங்கி உயர் அதிகாரிகள் தெரிவிக்கும் முடிவின்படியே அடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (மா)

### மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரி பிரச்னைகள்:

# அமைச்சர் இராசதுரை ஜனதிபதிக்கு விளக்கினர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பல்கலைக்கழக கல்லூரியின் பிரச்னைகள், குறைபாடுகள் குறித்து பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை அண்மையில் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்தனவைச் சந்தித்து விளக்கி, அவற்றைத் தீர்க்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

இச் சந்திப்பில் அமைச்சர் ஜனதிபதியிடம் பிரச்னைகள் குறித்து பின்வருமாறு விளக்கினர்.

மட்டக்களப்பு வளாகக் கல்லூரி ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது கல்வியை பூர்த்தி செய்து இவ்வருடத்துடன் வெளியேறுகிறார்கள். அவர்கள் உயர் கல்வியைத் தொடர வாய்ப்பு வசதிகள் இல்லை.

முன்பு மகாவித்தியாலத்தில் காணப்பட்ட ஆய்வுகூட வசதிகள் உள்ளது இவ்வசதிகள் விஸ்தரிக்கப்படவில்லை.

நூல்நிலையத்தில் போதிய நூல்கள் இல்லை 200மாணவர்களுக்கு 20 தளபாட வசதிகள் தான் உள்ளது.

போதிய சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இல்லை,

இவ்விவகாரங்கள் குறித்து தான் உரிய நடவடிக்கைகளை விரைவில்மேற்கொள்ளுவதாக ஜனதிபதி உறுதியளித்தார்.

நொடிப்பொழுதில்
உலகம்
உங்கள் கையில்!
?
உலகின்
எந்த மூலையாவது
இருக்கட்டும்!
வெளிநாட்டிலிருக்கும்
உங்கள் இதயங்களின் குரலை
தனிமையில் அனுபவிக்க
யூனிவேர்சல்
ரெலெக்ஸ்
536 (288), ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23100, 23006.

# மன்னாரில் சேதமடைந்த கடைகளுக்கு ரூ. 50,000 நஷ்டஈடு!

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்ற தீவைப்புச் சம்பவங்கள்பற்றி போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச்.முஹம்மத்அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்து அமுல்செய்ய உபகுழு ஒன்றை நியமிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி, போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மத் மன்னார் மாவட்ட அமைச்சர் ஜனுப். எம். ஈ. எச். மஹ்ரூப் ஆகியோர் இக்குழுவின் அங்கத்தவர்களாவர்.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரான ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

### 123 கடைகள் சேதம்

மன்னாருக்கு விஜயம் செய்துவிட்டு கொழும்புதிரும்பிய போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் முஹம்மத் மன்னாரில் 123 கடைகள் தீவைப்பினுல் சேதமடைந்ததாகத் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இத்தீவைப்புச் சம்பவங்களுக்கு இராணுவமே பொறுப்பு என்பதையும் அமைச்சர் முஹம்மத் ஒப்புக்கொண்டுள்ளார்.

### ரூ 50,000 நஷ்டஈடு

மன்னாரில் தீவைப்பினுல் சேதமடைந்த கடைகளுக்கு தலா 50,000 ரூபா நஷ்டஈடு வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

### இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை

மன்னாரில் இடம்பெற்ற தீவைப்பில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர்களுக்கு எதிராக இராணுவச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று தேசியபந்தோபஸ்து அமைசசர் திரு. லலித்அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

### அமைச்சர் லலித் மன்னார் விஜயம்

மன்னாரில் இடம்பெற்ற சம்பவங்களை நேரில் கண்டறிவதற்காக அமைச்சர் லலித்அத்லத் முதலி மன்னாருக்கு விஜயம் செய்யவுள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் சுவர்ணபூமி திட்டத்தின் கீழ் அரசாங்கக் காணிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எட்டு உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளிலும் இவ்வருடம் அரசாங்க காணிகளில் 2,000 பேருக்கு சுவர்ணபூமித்திட்டத்தின் கீழ் உறுதி வழங்கப்படவுள்ளது.

மண்முனை வடக்கு- 525, மண்முனை தெற்கு- 30, ஏறாவூர்- 350, கோறளைவடக்கு வாகரை- 130, கோறளைப்பற்று வாழைச்சேனை- 175, மண்முனைதெற்கு எருவில்- 150, பட்டிப்பளை கொக்கட்டிச்சோலை- 200, மண்முனை தெற்கு வெல்லாவெளி- 440 என்ற எண்ணிக்கையில் மேற்படி பிரிவுகளில் குடும்பங்கள் அடங்குகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை மாவட்டகாணி ஆணையாளர் திரு எம். மார்க்கண்டு மேற்கொண்டுள்ளார்.

# கணவனுடன் தகராறு இளம் மனைவி தற்கொலை!

(வவுணதீவு)

கணவனுடன் ஏற்பட்ட தகராறினுல் மனமுடைந்த இளம் மனைவி நஞ்சருந்தி தற்கொலைசெய்துகொண்ட சம்பவம் அண்மையில் தாண்டியடியில் நடைபெற்றது.

இச் சம்பவத்தில் சி. யோகம்மா (18 வயது) என்பவரே மரணமானவராவார்.

மேற்படி மரணம் தொடர்பாக கன்னன்குடா சடுதி மரணவிசாரணை அதிகாரி திரு. சி. கிருஷ்ணபிள்ளை விசாரணை நடத்தினுர்.

காலஞ்சென்றவரின் சுகவீனமுற்றிருந்த கைக்குழந்தையை அவரின் கணவர் தனது தாயின் வீட்டுக்கு கொண்டுசெல்ல முயன்ருராம். அதனை காலஞ்சென்றவர்ஆட்சேபித்தாராம். இதனைப் பொருட்படுத்தாத கணவர் குழந்தையை தாயின் வீட்டுக்கு கொண்டுசென்றதால் மனமுடைந்துநஞ்சருந்தி தற்கொலைசெய்துகொண்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

விசாரணை முடிவில் தற்கொலை என தீர்ப்பளிக்கப்பட்டது.

## வட்டு. லியோ கழகம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் விரைவில் லியோ கழகம் ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளது.

# "வீட்டைவிட்டு வெளியே போனவர் ஆஸ்பத்திரியில் பிணமாகக் கிடந்தார்"

(மாவிட்டபுரம்)

மல்லாகத்தில் நடந்த அசம்பாவித சம்பவங்களில் பலியான மாணவரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

மல்லாகத்தை சேர்ந்த செல்வம் சிவலிங்கம் [22வயது] க. பொ. த உயர்தர வகுப்பு மாணவனின் மரணம் சம்பந்தமான மரணவிசாரணை தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு.என். தம்பிராசாவால் நடாத்தப்பட்டது.

மரணவிசாரணையின் போது சாட்சியம் அளித்த இறந்தவரின் தமையன் பூதர் கந்தசாமி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:

''இறந்தவர் என் தம்பியார். என் பெற்ருர் இறந்தபின் இவர் என்னுடன் இருந்துவந்தார். சம்பவதினம் 4 மணிக்கு வீட்டில் இருந்து போனவர் வீடுதிரும்பவில்லை. பின் தேடியும் காணவில்லை. தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் பார்த்தபோது அங்கு மரணமான தம்பியை அடையாளம் காட்டினேன்'' என்ருர்.

மாவட்ட நீதிபதியின் உத்தரவுப்படி இறந்தவரை உறவினர்களிடம் மரணவிசாரணை அதிகாரி திரு. என். தம்பிராசா ஒப்படைத்தார்.

# ரூபவாஹினி

மாலை

5-30 வேர்ல்ட் ஒவ் ஸ்ரோரீஸ் சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்)

5-45 'நியூஸ்பைட்டர் மான்' (ஆங்கிலம்)

6-15 சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்)

6-55 செய்திகள் [தமிழ்)

7-15 'ஜெமினி மான்' (ஆங்கிலம்)

8-15 செய்திகள் (சிங்களம்)

8-35 நாடகம் (சிங்களம்)

9-30 செய்திகள் (ஆங்கிலம்)

9-50 'ஒலிம்பிக் 84' அரை இறுதி இறுதிப்போட்டிகள்

10-30 உலகச் செய்திகள்

10-35 ஒலிம்பிக் தொடர்ச்சி

11-00 நிகழ்ச்சிகள் முடிவு

# வங்கிகள் மூடப்பட்டுள்ளதால் 8,000 ஆசிரியர்கள் சம்பளம் பெறமுடியாதநிலை

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கிக் கிளைகள் மூடப்பட்டுள்ளதால் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுமார் 8000 ஆசிரியர்கள் இம்மாதம் சம்பளம் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இவர்களுக்கு இம்மாதம் 20-ம் திகதி சம்பள தினமாகும். இவர்களுக்கு கல்விக் கந்தோர், கல்லூரிகள் மூலம் காசோலையாகத்தான் சம்பளம் வழங்குவதுண்டு. வங்கிகள் மூடப்பட்டுள்ளதால் காசோலைகளை மாற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் ஆயிரக்கணக்கான ஒய்வூதியம் பெறுவோரும், தங்கள் ஒய்வூதியத்தை பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர் சம்பள முற்பணத்தையும் இன்னும் பெறவில்லை என்று கூறப்படுகிறது. அரசாங்ககாரியாலயங்கள் கடந்த வாரம் இயங்காததினுல் இம்மாத சம்பளப் பட்டியல்கள் தயாரிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

சில காரியாலயங்களில் அரசாங்க ஊழியர் கடமைக்கு வரவில்லை என்றும், மற்றும் சில காரியாலயங்களில் அரசாங்க ஊழியர்கள் வந்து கையெழுத்து வைத்துவிட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது

## தட்டுப்பாடின்றி விநியோகம்

(ஊரெழு)

ஊரெழு பகுதி மக்களுக்கு அரிசி, மா, சீனி, மண்ணெணெய் போன்ற அத்தியாவசியப் பொருட்களை அப்பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் தட்டுப்பாடின்றி வழங்கி வருகின்றன. இதற்கான ஏற்பாடுகளை வலி கிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப்பீடம் செய்துள்ளது. அரிசி, மா போன்ற உணவுப் பொருட்கள் தாராளமாக விநியோகம் செய்யப்படுவதுடன் ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ கிராம் சீனியும், 5லீட்டர் மண்ணெண்ணெயும் வழங்கப்படவிருப்பதாகவும் மேற்படி சங்கத்தின் இயக்குநர் சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை, பிரப்பங்குளம், அருள் மிகு ஸ்ரீ மகாமாரி அம்பாள் ஆலய விநாயகப் பெருமானுக்குஇம்மாதம் 30ம் திகதி வியாழக்கிழமை ஆவணி சதுர்த்தி அபிஷேகமும்' தீப ஆராதனையும், நடைபெறவுள்ளது.

# ரூ. 50,000 நகைகள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

வீட்டின் கூரை ஓடுகளைக் களட்டிவிட்டு உட்புகுந்த திருடர்கள் ரொக்கப்பணம் உட்பட 50ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடிச் சென்றதாக யாழ் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த பருத்தித்துறை வீதியிலுள்ள எஸ். தேவராசா என்பவரின் வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

கடந்த 14ம் திகதி இரவு அவ் வீட்டில் கயிற்றின் உதவி மூலம் வீட்டுக் கூரையைப் பிரித்து இறங்கிய திருடர்கள், தாலிக்கொடி, சங்கிலி, 2 காப்பு, கைக்கடிகாரம், ரொக்கப்பணம் 1300 ரூபா ஆகியன வைக்கப்பட்டிருந்த சூட்கேசை எடுத்துச்சென்று, அதற்குள் இருந்தவற்றை எடுத்துவிட்டு சூட்கேசை வீட்டின் பின்பக்கம் போட்டுவிட்டுச் சென்றுவிட்டார்களாம்.

அடுத்தநாள் காலை வீட்டுக்காரர் வீட்டின் பின்பக்கம் பார்த்தபொழுது வெறுமையாகச் சூட்கேஸ் கிடந்ததைக் கண்டபோதே திருட்டு நடைபெற்றது தெரியவந்தது. (மா)

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்



நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 11 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அருமையில்)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ்: - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸ்திரேலியா கட்டிடம்
த.பெ. 1917, 54 யோர்க் வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ். - 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி: - 22726 547884, 548626, 549065, 549066

ஹோம் பிறன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்!

புறப்படும் திகதி

18 - 8 - 84 சனிக்கிழமை

தற்போதைய சூழ்நிலை கருதி
மாலை 6 மணிக்கு
கன்ஞதிட்டி சந்தியிலிருந்து புறப்படும்.

டிக்கட் பதிவு செய்யுமிடங்கள்

1. ஹோம் பிறன்ஸ் லிமிட், கன்ஞதிட்டி.
தொலைபேசி; 24310

2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர்,
இல 6, ஆஸ்பத்திரி வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23596

3. நியூ ப்ரசீதா சேல்ஸ் சென்ரர்,
இல. 337, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22480

# "மாணவரின் சமுதாயநலன் பேணப்பட வேண்டும்"

[மானிப்பாய்]

''சனத்தொகையில் சுமார் 30 சதவீதத்தினர் மாணவர்களே இதன் காரணமாக இவர்களது உடல் உள், சமுதாய சுகாதார நலம் பேணுவது மிக்க பொறுப்பானதொரு கடமையாக இருக்கின்றது. நமது சூழலில் காணப்படும் பிரச்னைகளையிட்டு ஒவ்வொரு மாணவரும் கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். வகுப்பறையில் சந்தர்ப்பம் கிடைக்கும் நேரங்களில் திட்டமிட்ட போதனைகளை மேற்கொள்ளல் வேண்டும்.''

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் சுகாதார இணைப்புச் சபையின்கூட்டம் சுன்னுகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன் தலைமையில் நடைபெற்றபோது திரு. தனஞ்சயன் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார்.

இக்கூட்டத்தில் பின்வரும் விஷயமடங்கிய அறிக்கை ஒன்றும் இச்சபையினரால் வெளியிடப்பட்டது.

கல்விக்கு முதலிடம் கொடுக்கும் அதே வேளையில் மாணவர் உடல், உள, சமுதாய நலனும் பேணப்படல் வேண்டும். ஆரோக்கியமான குழந்தையே நிறைவாகக் கற்கவும், வாழவும் முடியும்.

மாணவர்களிடம் காணப்படும் பிரச்னைகள் உடனடியாகத் திர்க்கப்படல் வேண்டும். பாதிப்புக்குள்ளாகிய பிள்ளைகள் அண்மையிலுள்ளவைத்திய நிலையங்களுக்கு சனிக்கிழமை முற்பகல் நேரங்களில் சிகிச்சைக்கு அனுப்புதல் சிறந்ததாகும் பெற்றோர்களைக் கூடியளவு இதில் சிரத்தை கொள்ள ஆவன செய்தல் வேண்டும்.

பற்சுகாதாரம்பற்றியும் மலசலகூடம் பாவித்தல் பற்றியும் இதில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது.

அடுத்த மாதத்தில் சகல பாடசாலைகளில் சுகாதார தினம் கொண்டாடப்பட வேண்டும் எனவும் இதனையொட்டி பேச்சு, எழுத்துப் போட்டிகளும் கண்காட்சிகளும் நடத்தப்பட ஏற்ற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவுப் கேட்கப் பட்டுள்ளது.

இச்சுகாதார இணைப்புச் சபையின் உறுப்பினர்கள் வருமாறு:

தலைவர்:- மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்சயன், செயலாளர்:- யாழ். இணுவில் அ. மி. த. க பாடசாலைஅதிபர் திரு. செ. சோதிப்பெருமாள், மற்றும் உறுப்பினர்களாக டாக்டர் இ. தெய்வேந்திரன், டாக்டர் ஆர். சிங்கராசா, டாக்டர் கே. கிருஷ்ணராசா, திருவாளர்கள் கா. வைத்தீஸ்வரன், பொ இரா. நடராஜன், ஐ. நவரத்தினம், த. நடராசா, டி. கனகசுந்தரராசா, கே. எஸ். செல்லையா, க. தங்கவேலாயுதம், திருமதி ரி. துரைசிங்கம், திருமதி என். இராசதுரை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்றைய பலன்

மாதம்— ஆவணி
திகதி— 2 (18-08-1984)
வாரம்— சனி
திதி— ஷஷ்டி காலை 56 ன் மேல் ஸப்தமி
நக்ஷத்திரம்— அச்சுவிமி காலை 7-52ன் மேல் பரணி

மேடம்: தூரத்துப் பயணம் துயரத்தைத் தரலாம் வருமானத்தில் வீழ்ச்சி தென்படும் வைத்தியச் செலவிற்கு இடமுண்டு இன்று சிறு வருத்தம் வரினும் பெறுமுறையில் கவனிக்கவும்.

இடபம்: குடும்பம் இன்று கலைக்கோயிலாகமாறும்இசைத் துறையில் இன்று ஆர்வம் பிறக்கும். பிள்ளைகளினுல் பெருமைக்கும் இடமுண்டு.

மிதுனம்: நண்பர்களே உங்கள் முன்னேற்றத்தை தடுப்பார்கள் சிறுவிடயமொன்று அதிக பரபரப்பை ஏற்படுத்தும் தொழில் முறையில் நஷ்டம் ஏற்படலாம்.

கடகம்: இறைவழிபாடு மேலிடும் இதயத்தில் அமைதி ஏற்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவுவார்.

சிங்கம்: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள் தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும் வெளியிடத்துச்செய்தி கிடைக்கும்.

கன்னி: மெத்தவும் பொருள் சேரும் மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிடைக்கும் செய்தியுடன் தேனுகும் வாழ்வும் உண்டு

துலாம்; தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு வியாபாரிகள் புதிய முதலீடுகளைத் தவிர்த்துக் கொள்ளவும் முகமன் கூறுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்.

விருச்சிகம்: அன்னியர் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் வயிற்றுக் கோளாறுக்கும் இடமுண்டு உணவுவிடயத்தில் அதிகம் கவனம் செலுத்தவும்.

தனுசு: மனம் நிறைந்தசம்பவம் இடம்பெறும் பெரியவர்களின் ஆசி தாராளமாகக் கிடைக்கும் கைவிடப்பட்ட பணம் மீண்டும் கிடைப்பதற்கு இடமுண்டு.

மகரம்: குடும்பத்தில் சிறு பூசல் தலை தூக்கும் பெரியவர் ஒருவருடன் அபிப்பிராய பேதம் தோன்றக் கூடும் ஆத்திர உணர்ச்சியால் மோதல் ஏற்படும் அமைதியாக இருக்கவும்

கும்பம்: கனிவான நினைவுகளில் இன்று மிதந்து செல்வீர்கள் கல்வித்துறையில் வித்துவத்தன்மை தென்படும் வாகனம் செலுத்துபவர்கள் மக்கள் ஆதரவைப் பெறுவர்.

மீனம்: செய் தொழிலால் சிறப்புக் கிடைக்கும் வழக்கு விவகாரம் வெற்றிதரும் நீண்ட நாள் பிரச்சனைக்கு இன்று நல்ல முடிவைத் தேடிக்கொள்வீர், வெளியிடத்துச் செய்தி மகிழ்ச்சிதரும்

திருமலை
வே. ரவீந்திரன்

## இங்கிலாந்துக்கெதிரான 5 கிரிக்கெட் டெஸ்டுகளிலும் மே.இந்திய தீவுகள் வெற்றி!

(லண்டன்)

மேற் இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையே லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற 5வது இறுதி கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியதீவுகள் அணி 172 ஓட்டங்களினுல் வெற்றிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மே.இ.தீவுகள் முதல் இன்னிங்ஸில் 190 ஓட்டங்களை எடுத்தது. கப்டன் லோயிட் ஆட்டமிழக்காமல் 60ஓட்டங்களை எடுத்தார். இங்கிலாந்து வீரன் போதாம் 5விக்கெட்டுகளை வீழ்த்தினுர். இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 162 ஓட்டங்களை எடுத்தது. மல்கம் மார்ஸ் 5விக்கெட்டுகளை வீழ்த்தினுர். மே.இ.தீவுகள் 2வது இன்னிங்ஸில் மொத்தம் 346 ஓட்டங்களை எடுத்தது. இதில் கெயின்ஸ் 125 ஓட்டங்களை எடுத்தார். இங்கிலாந்து தமது 2வது இன்னிங்ஸில் 202 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தமையினுல் மே.இ.தீவுகள் 172 ஓட்டங்களினுல் வெற்றி பெற்றது.

இங்கிலாந்து மண்ணில் நடைபெற்ற 5டெஸ்ட் போட்டிகளிலும் மே. இ. தீவுகள் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1வது டெஸ்ட் மே. இ. தீவுகள் ஒரு இன்னிங்ஸில் 180 ஓட்டங்களினுல் வெற்றி. 2வது டெஸ்ட் மே.இ.தீவுகள் 9விக்கெட்டுகளினுல் வெற்றி. 3வது டெஸ்ட் மே.இ.தீவுகள் 8விக்கெட்டுகளினுல் வெற்றி. 4வது டெஸ்ட் மே.இ.தீவுகள் இன்னிங்ஸில் 64ஓட்டங்களினுல் வெற்றி. (சூ)

## சர்வதேச டெனிஸ் சாம்பியன் போட்டி

(கொழும்பு)

இலங்கையில் சர்வதேச கனிஷ்ட டெனிஸ் சாம்பியன் சுற்றுப் போட்டி நேற்று கொழும்பு கிறீன்பாத்டெனிஸ் அரங்கில் ஆரம்பமானது.

இதில் 18வயதுக்குட்பட்ட பாக்கிஸ்தான், இந்தியா, தாய்லாந்து, இலங்கை ஆகிய நாடுகளின் டெனிஸ் வீரர்கள், வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர்.

இம் மாதம் 21ம் திகதிவரை இச்சுற்றுப் போட்டி இடம்பெறும் இதனை இலங்கை டெனிஸ் சங்கத்தலைவர் திரு. எல்மோபெரேரா ஒழுங்கு செய்துள்ளார். (கி)

## சுகாதார பயிற்சி வகுப்பு

(கிளிநொச்சி)

ஆரம்ப சுகாதாரப் பயிற்சி வகுப்பொன்று கிளிநொச்சி திருநகரில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. ஒரு வாரகாலம் நடைபெறவுள்ளள இப் பயிற்சி வகுப்பை திருநகர் மாதர் சங்க தலைவி திருமதி.சோ. செல்வராணி ஆரம்பித்து வைத்தார். 45இளைஞர் யுவதிகள் இவ்வகுப்பில் பங்குகொண்டனர். திருநகர் மருத்துவமாது திருமதி. கே. இராசரத்தினம் பயிற்சிக்கு பொறுப்பாக உள்ளார்.

## யாருடையது

சண்டிலிப்பாய் மேற்கைச் சேர்ந்த திரு. கணேசு கலாரஞ்சன் என்பவரின் அடையாள அட்டையை திரு.நா.சண்முகநாதனும், முகமாலையைச் சேர்ந்த திரு.கனகலிங்கம், சந்திரசேகரம் என்பவரின் அடையாள அட்டையை ஒரு அன்பரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்க்ள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## மாணவனை விடுவிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

உடுவிலில் வீடுகள் சோதனையிடப்பட்டபோது கைதான யாழ். பல்கலைக்கழக 3-ம் வருடமாணவன் அ. விஜயநாதனின் நிலைமை குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இணைப்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு, இம்மாணவன் பற்றிய சகல விபரங்களையும் தெரிவித்து அம்மாணவன் பரீட்சை எடுக்க விருப்பதால் அவரை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளார். [க]

## 21-ல் ஓய்வூதியம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு தபால் அலுவலகப் பிரதேசத்திலுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு இதுவரை வழங்கப்படாதிருக்கும் கடந்த மாத ஓய்வூதியப் பணமும் இம்மாதம் 21-ல் யாழ்ப்பாணம் பெரிய தபால் கந்தோரில் வைத்து வழங்கப்படும் என்று யாழ்.மாவட்ட தபால் சேவை அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக பண்டத்தரிப்பு தபால் அலுவலக அதிபருக்கு யாழ்.மாவட்ட தபால் சேவை அத்தியட்சகர் விபரமான கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில்இதுவரைகாலமும் ஓய்வூதியம் பெற்று வந்த 372 பென்சன்காரர்களும் தங்கள் பென்சன் பணத்தை இம் மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள பிரதம தபால் கந்தோரில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## புதிய தலைவர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவிற்பற்று ப.நோ.கூ சங்கத்தின் புதிய தலைவராக திரு சி.வெ.வ.மா.க.முதலியார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்,

இலங்கை சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் தலைவராக நீண்ட காலம் பணியாற்றி வரும் திரு.முதலியார் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசுடன் நெருக்கமான தொடர்புடையவர்.

மானிப்பாய் ப.நோ.கூ சங்கத்தின் உப தலைவராக திரு. அ.செ.ஜயாத்துரை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இயக்குனர் சபையின் ஏனைய உறுப்பினர்கள் வருமாறு:-

க. மழவராயர், ச.இராசனுயகம், சி.செல்வனுயகம், சு. தருமசீலன், மா.குமாரசாமி.

## சந்தை பற்றி புகார்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில்நடைபெற்று வரும் இரவுச் சந்தையை நிறுத்துமாறும், வழமைபோல் புதன்கிழமையும், சனிக்கிழமையும் மட்டுமே சந்தை கூட நடவடிக்கை எக்குமாறும், சந்தை கூடுவதற்கு முதல்நாள் இரவுச் சந்தை ஆரம்பித்துவிடுவதால் பொதுமக்கள் அதிகம் சிரமமடைவதாகவும் பொருட்கள் இரவுவேளை திருட்டுப்போவதாகவும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கஅதிபருக்கு புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விரிவுரை

[யாழ்ப்பாணம்]

யாழ்.றிம்மர் மண்டபத்தில் செப்டம்பர் மாதம் 6ம்திகதி 'வட்டுக்கோட்டை செமினரியில் முப்பெரும் அறிஞர்கள்' என்னும் விடயம் பற்றி திரு. சு.ஜெபநேசன் விரிவுரை நிகழ்த்துவார்.

யாழ்.கிறிஸ்தவ சமய சமுதாய ஆய்வு நிலையத்தின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்ச்சிக்கு முன்னுள் இந்துக் கல்லூரி அதிபர் திரு.ந.சபாரத்தினம் தலைமை வகிப்பார். (ப)

## குண்டுவெடிப்பு சத்தங்கள்

(பண்டத்தரிப்பு)

மாதகல் கடற்கரைப் பகுதியில் நேற்று இரவு தொடர்ந்து பத்துக்கும் மேற்பட்ட குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

பீரங்கி வெடிகள் தீர்க்கப்பட்ட சத்தங்கள் தமக்குகேட்டதாக மாதகல் கடற்கரைப்பகுதியில் வாழும் மக்கள் தெரிவித்தனர். இதனுல் அப்பகுதி மக்கள் மிகுந்த கலவரமடைந்துள்ளனர்.


ஸ்ரீதர் (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
என் தம்பி

சாந்தி (யாழ் நகர்)
10-30, 2-30, 4-45, 7-00
BAD BLOOD
Action-Adults Only
திகிலூட்டும்மர்மச்சித்திரம்

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
சிவாஜி - பத்மினி
சாவித்திரி - தேவிகா
சரஸ்வதிசபதம்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
கமல்-சுஜாதா
கடல் மீன்கள்
(கலர் - புதிய பிரதி)

வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-30
எம். ஜி. ஆர். -சாவித்திரி
வீரப்பா - சந்திரபாபு
மகாதேவி
(புத்தம் புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
சிவாஜி-கிரிஜா
கண்ணும்மா
மனோகரா
(புதிய பிரதி)

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, —2-30,
4-30 — 7-00
STIAR GRAZY
(Adults Only)

றீகல் (யாழ். நகர்)
10-30, 2-15, 4-30, 6-30
Terrence Hill
Bud Spencer ..
"WHO FINDS A FRIEND FINDS A TREASURE"
[Latest Action - Comedy]
(வேதனைகளுக்குள்ளும் உங்களை சிரிக்க வைக்கிருர்கள்)

லிடோ யாழ். நகர்
Daily
10-30, 2-30, 4-45, 7- 15
THE BURNING
(Strictly for Adults)

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
எம்.ஜி.ஆர்-லதா நடித்த
நவரத்தினம்
(ஈஸ்மன் கலர்)

# பாகிஸ்தான் விமானத்தில் கிளம்பிய மர்மப்புகை!

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் கட்டுநாயகா விமானநிலையத்தில் தரித்துநின்ற பாகிஸ்தான் 'எயர்லைன், டிசி 10 விமானத்திலிருந்து கிளம்பிய மர்மப் புகை, விமானநிலைய அதிகாரிகளைத் திகிலடையச்செய்தது!

உடனடியாகத் தீயணைக்கும் படை அழைக்கப்பட்டு விமானத்தில் ஏற்பட்ட புகை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

விமானத்தின் என்ஜினில் ஏற்பட்ட கோளாறு திருத்தப்பட்டு இந்த விமானம் மீண்டும் புறப்பட்ட போதிலும், கட்டுநாயக்கா விமானநிலையத்துக்கே மீண்டும் விமானம் திரும்பியது!

## தேசிய சேமிப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த வங்கியைப் பார்வையிட்டனர்.

வங்கியின் முன்வாசல் இரும்புப்பின்னல் கதவு சின்னாபின்னமாகிப் பெயர்ப்பலகை அறுந்து அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

வங்கிக் கட்டிடத்திற்குப் பெரும் சேதம் எதுவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

வங்கிக் காரியாலயம் முற்றாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளது. மேசை, கதிரைகள் யாவும் சேதமடைந்துள்ளது. பைல்கள், தஸ்தாவேஜுகள் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடக்கக்காணபடுகிறது.

முன்பக்கக் கண்ணாடி கதவுகள் யாவும் நொருங்கி காணப்படுகிறது. முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்றும் சரிந்து விழுந்துகிடக்கிறது.

அதிகாலை 2 மணிவரை, வங்கியில் சத்தங்கள் கேட்டபடி இருந்ததாகவும் கூறப்படுகிறது.

வங்கி உத்தியோகத்தர்களும் பொலிசாரும் நேற்றுக் காலை விசாரணை மேற்கொண்டார்கள். (க-மா)

## இராணுவத்தீர்வு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதிநிலைமை குறித்து அமைச்சர் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:

''வடக்கில் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளினால் மாமூல் வாழ்க்கை சீர்குலைந்துள்ளது ஆனாலும் அங்கு மீண்டும் வழமையான வாழ்க்கைமுறையைக் கொண்டுவர அரசு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துவருகிறது.

'மூடப்பட்ட வங்கிகளை மூன்று நான்கு தினங்களில் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது வடபகுதியைக் குழப்ப தீவிரவாதிகள் எவ்வளவு முயன்றாலும், அரசாங்கம் இதற்கு இடங் கொடுக்கமாட்டாது.

'வல்வெட்டித்துறையில்கடற்படையினர் மீது பிரபாகரன் குழுவினர் தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அசம்பாவித சம்பவங்கள் தலைதூக்கின. தீவிரவாதிகளிடம் பணத்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால் தான் வங்கிகளை அவர்கள் கொள்ளையடிக்கின்றனர்.

''இலங்கைத் தமிழர் பிரச்னை எமது பிரச்னை. இப்பிரச்னையை இலங்கைதான் தீர்த்துவைக்கவேண்டும்.

''தீவிரவாதிகள் தமது இழப்பை ஈடுசெய்வதில் இப்பொழுது கவனம்செலுத்தி வருகின்றனர் நமது படையினர் எப்பொழுதும் முன் எச்சரிக்கையுடன் செயல்படுகின்றனர்'' என்று அமைச்சர் லலித் தெரிவித்தார்.

## இலங்கைத்தமிழர்-

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் என்று இந்திய அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

''இப்பிரச்னைக்குத் தீர்வு காணும்வழிவகைகள்பற்றிஉலகத்தலைவர்களுடன் குறிப்பாக முஸ்லிம் நாட்டுத் தலைவர்களுடன் பிரதமர் திருமதி காந்தி தொடர்பு கொண்டு வருகிறார்.''

### தி. மு. க வெளிநடப்பு

இந்த அறிக்கை ராஜ்ய சபையில் சமர்ப்பிக்கப்பட்டதைத்தொடர்ந்து உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

தி. மு. க. உறுப்பினர் திரு. வை. கோபால்சாமி இந்த அறிக்கையை வன்மையாகக் கண்டித்தார்.

''இலங்கையுடன் சகல தொடர்புகளையும் இந்தியா துண்டிக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டதுடன் அவர் சபையிலிருந்தும் வெளிநடப்புச்செய்தார்.

லோகசபையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கும் காரசாரமான விவாதம் நடைபெற்றது.

இதுகுறித்து இம் மாதம் 21ம் திகதி முழு அளவிலான விவாதம் நடைபெறுமென சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்தர் தெரிவித்தார்.

## தபாலகத்தில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டு வந்ததாகவும், இம்மாதம் 5-ம் திகதி யாழ் மாவட்டத்தில் ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களின் பின்னர் இவ்வாறு பணம் எதுவும் அங்கிருந்து அனுப்பப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது சுமார் 65 ஆயிரம் ரூபாவுக்கான மணி ஓடர்களும், 27 ஆயிரம் ரூபாவுக்கான சேமிப்பு பத்திரச்சான்றிதழ்களும் பொதுமக்களுக்கு மாற்றிக்கொடுக்க முடியாத நிலையில் இத்தபாலகத்தில் தேங்கிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## குண்டுவெடிப்புச் சம்பவம்:

# கைதானவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்

சென்னை, ஆக. 17

சென்னை மீனம்பாக்கம் விமானநிலையத்தில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக ஏற்கெனவே கைதுசெய்யப்பட்ட ஐவரும் நேற்றுமுன்தினம் சென்னை சைதாப்பேட்டை மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்கள் மீது பொலிஸ் விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருவதாகப் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதால் இவர்களைத்தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பில் வைத்திருக்குமாறு நீதிபதி உத்தரவிட்டு மீண்டும் ஆஜர்செய்யுமாறு பணிப்புரை வழங்கினார்.

சந்தேகநபர்களை நீதிபதி, ''பொலிஸ் பாதுகாப்பில் நீங்கள் இருக்கும்போது கவனமாகக் கவனித்தார்களா?'' என்று கேட்டபோது அவர்கள் தம்மைப் பொலிசார் பண்பாக நடாத்தியதாகத் தெரிவித்தனர். விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. [இ]

## மரண அறிவித்தல்

### திருமதி பா. மொனிக்கம்மா

திருமதி பாக்கியநாதர் மொனிக்கம்மா காலமாகிவிட்டார். இவர் திரு. வே. பாக்கியநாதர் (இளைப்பாறிய இராணுவ சார்ஜன்ட், சிங்கறெஜிமென்ட்; முன்னாள் மக்கள் வங்கி ஊழியர் சுன்னாகம்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெகதீஸ்வரி, யூலேக்கா, செல்வதாசன், கொறற்றி, அருட்சகோதரி மேரி இலேன் (அப்போஸ்தலிக்க கார்மேல் சபை), காமினி, ஜோன் கென்டி ஆகியோரின் அன்புத்தாயாரும், வில்லியன் அருள் நேசனின் மாமியாரும், சுபாசினியின் பேத்தியாரும், திருமதி ஸ்ரனிஸ்லாஸ் சொர்ணம்மாவின் சகோதரியும், பேர்னட் மாட்டின், பேர்னட் ஜோசவ், திருமதி நிக்கலஸ் லில்லிமலர் ஆகியோரின் மைத்துனியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று 18-8-84 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக யாழ். புனித மரியாள் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

''தமிழ்''

13, புதுமைமாதா கோவில் கிழக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

1378

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

## ''இலங்கைபற்றி ஆராய அனைத்துக் கட்சிகளையும் கூட்டவேண்டும்''

### வாஜ்பாய் கோரிக்கை

(சென்னை)

இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பாக ஆராய்வதற்காக இந்தியாவிலுள்ள அனைத்துக்கட்சிகளையும் கொண்டகூட்டம் ஒன்றை உடனடியாககூட்டவேண்டும் என்று பாரதீய ஜனதா கட்சித் தலைவர் திரு. வாஜ்பாய் வேண்டுகோள்விடுத்துள்ளார்

வடசென்னையில் அம்பேத்கார் சிலையை திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரினார்

இந்திய அரசியலில் மிகமுக்கியமானவராக கருதப்படும் முன்னாள் வெளியுறவு அமைச்சரான வாஜ்பாய் இலங்கைப் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை அல்ல அது ஒரு சர்வதேசப் பிரச்னை என்றும் கூறினார்.

# இப்படியும் நடக்கிறது

வெங்காயம் என்றால்' 'விஷயம்' தெரிந்தவர்கள் நினைப்பது ஈ. வெ ரா. பெரியாரை. மற்றவர்கள் கருதுவது... ஒன்றுமில்லாததைத்ததான். ஆனாலும், பெரியார் சொன்னதும் இதே கருத்தைத்தான். அதாவது வெங்காயத்தை உரிக்க உரிக்க கடைசியில் ஒன்றுமே இல்லை என்பதுதான்.

மேற்சொன்னது ஈ. வெ. ரா. வெஙகாயக்கதை. இப்போது நான் கூறப்போவது நம் ஊர்க் கதை.

வடபகுதி விவசாயிகள் பலர் விதைவெங்காயம் பெற விரும்பி 'அதை இதை' அடகுவைத்து ஆயிரம் ஆயிரமாகப் பணத்தைக் கட்டினார்கள். ஆனால் மாதங்கள் பல ஆகியும் விதைவெங்காயம் வந்தபாடில்லை. கப்பல் பார்த்த கதைதான்.

பொறுமை இழந்து, ''வேண்டாம் விதை வெங்காயம். காசைத் திருப்பித் தாருங்கள்'' என்று விவசாயிகள்கேட்டால்...... ப நோ. கூ. சங்கங்கள் ரொக்கப் பணத்துக்குப் பதிலாகக் காசோலைகளை வாரி வழங்குகின்றார்களாம்! ''காசோலைகளை நாக்கு வழிக்கவா...?'' என்று அவர்கள் கேட்பதில் நியாயம் இல்லையா?

'ஊடுருவி'

## 20 நிமிடங்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே சென்றனர்.

நேற்றைய மகாநாட்டில், இரண்டாவது சபை குறித்து ஜனாதிபதி தெரிவித்தயோசனை பற்றி விரிவாக ஆராயப்படும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதிலும், இரண்டாவது சபை பற்றி எதுவுமே பிரஸ்தாபிக்கப்படவில்லை.

நேற்றைய மகாநாட்டுக் கூட்டம் பற்றி மாநாட்டு பேச்சாளர் அமைச்சர் லலித் அத்துலத்முதலி செய்தியாளர் மகாநாட்டில் விபரிக்கையில், ''வடபகுதி நிலைமை காரணமாகத் தாங்கள் தொடர்ந்து கலந்துகொள்வதில்லை'' என்று தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழரசுக்கட்சியும் அறிக்கை விடுத்து, கூட்ட நிகழ்ச்சிகளிலிருந்து இன்று பின்வாங்கினர் என்றும் சர்வகட்சி மகாநாடு மீண்டும் இம்மாதம் இருபத்தோராம் திகதி கூடும் என்று ஜனாதிபதி அறிவித்துள்ளார் என்றும் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இம்மாதம் 21-ம் திகதி மகாநாட்டில் கலந்துகொள்ளுமா என்று செய்தியாளர் ஒருவர் அமைச்சரிடம் கேட்ட போது மகாநாட்டில் கலந்து கொள்வார்களா என்பது பற்றி தமக்குத் தெரியாதென்று அமைச்சர் பதிலளித்தார். (இ)

## இரு இளைஞர்கள்..

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பிரயோகம் செய்ததில் அவர்கள் காயமடைந்ததாகவும் தெரியகின்றது.

தீவிரவாத இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் இவர்களைப் பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர்.

# இருவர் கைது!

(சென்னை ஆக. 17)

இராமேஸ்வரம் பொலிசார் கடந்த வெள்ளிக்கிழமை இரு இளைஞர்களைக் கைக்குண்டுகள் அடங்கிய ஆறு பார்சல்களுடன் கைது செய்தனர்.

இவர்கள் இலங்கையைச்சேர்ந்தவர்களென்றும் குணசேகரன் (வயது 28), மோகனதாஸ் (வயது 20) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களென்றும் இராமேஸ்வரம் பொலிசார் தெரிவிக்கின்றனர். (இ)

## கூட்டுறவுச் சங்கக் கிளைகள் நாளையும் திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். ப நோ. கூ. சங்கக் கிளை நிலையங்கள் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 தொடக்கம் நண்பகல் 12-30 வரை பாவனையாளர்களுக்காக திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்று மேற்படி சங்கத் தலைவர் திரு. ஆ மு. ஆலாலசுந்தரம் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பாவனையாளர்கள் வாங்குவதற்காகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சகல பொருட்களும் தாராளமாக வழங்கப்படுகின்றன என்றும் அவர் சொன்னார்.

## உப அலுவலகத்தில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இனந்தெரியாத இருநபர்களால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பகல் 11 மணியளவில் மயிலிட்டியிலுள்ள உப-அலுவலகத்திலேயே இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளில் சென்ற இருநபர்கள், உப அலுவலகப் பிரதமலிகிதரான எஸ். எஸ். சிவஞானசுந்தரத்தைப் துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். [மா]

## இலங்கை கப்பல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னத் தலைவர் திரு. எஸ். ஆர். குர்கானி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கம் கடைப்பிடித்துவரும் கொள்கைகளைக் கண்டிக்கும்வகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

திரு. குர்கானி தெரிவித்திருப்பது போல் இலங்கைக் கப்பல்கள் இந்தியத் துறைமுகங்களில் பகிஷ்கரிக்கப்படுமானால் இலங்கைக் கப்பல் வர்த்தகத் துறைக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

பல இலங்கைச் சரக்குக் கப்பல்கள் சென்னைத்துறைமுகத்தை மையமாகக் கொண்டே போக்குவரத்துக்களை மேற்கொள்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (கி)